**CC.No**.43/2024
**Date**: 26.02.2026

**ம.சா.** 1. கௌதம் , த/பெ. கருப்பையா, காரைக்குடி (பவர் ஏஜெண்ட்)
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை**

**1) எனக்கு பூர்வீகம் எந்த ஊர் என்றால் காரைக்குடி. என் மனைவி சித்ராவிற்கு பூர்வீகம் எது என்றால் கோனாபட்டு கிராமம். எங்கள் திருமணம் காதல் திருமணம். எங்கள் திருமணம் பதிவு திருமணம். பதிவு செய்த தேதி நினைவில்லை ஆனால் 2023 ல் பதிவு செய்யப்பட்டது. 10.06.2022 ல் காரைக்குடி விஜயா மகாலில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முன்பு நிச்சயதார்த்தம் நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. எத்தனை நாட்களுக்கு முன்பு நடைபெற்றது என்றால் தேதி நினைவில்லை. சுமார் 1 மாதம் இருக்கும். 10.06.2022 ல் நடைபெற்ற திருமணத்தில் இரு வீட்டாரும் கலந்துகொண்டனர். என் மனைவியான புகார்தாரர் சித்ராவின் தகப்பனார் பெயர் தேசபந்து. வழக்கில் சொல்லப்படும் பணம் கொடுக்கல் வாங்கல் எங்கு நடைபெற்றது என்றால் கோனாபட்டு கிராமத்தில் நடைபெற்றது. அது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அப்போது நான் உடன் இருந்தேன். பணம் கொடுத்தாக சொல்லும் தேதியில் புகார்தாரர் சித்ராவிற்கு என்னுடன் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான்.**

**2) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது. அதை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் கடன் கேட்கப்பட்டு எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் கடன் கேட்ட தேதி நினைவில்லை கொடுத்த தேதி 21.11.2021 ல் கொடுக்கப்பட்டது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு விபரங்கள் நானும் என் மனைவியும் சேர்ந்துதான் விபரம் சொன்னோம். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது என் மனைவி தாக்கல் செய்த நிரூபண**

வாக்குமூலத்தில் 21.11.2021ல் கடன் கேட்கப்பட்டு அன்றை தினமே கடன் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் நினைவில்லை. என் மனைவியிடம் கேட்டு இதுநாள் வரை தெரிந்து கொள்ளவில்லை. கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் யார் யார் உடன் இருந்தனர் என்றால் நான், எனது மனைவி, எதிரியின் மகள், எனது நண்பர் ராஜபிரபு உடன் இருந்தனர். எத்தனை மணிக்கு கடன் கொடுக்ககப்பட்டது என்றால் மதியம் கொடுக்கப்பட்டது . நேரம் நினைவில்லை. கடன் கொடுப்பதற்கு ஆதரவாக என்ன என்ன ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்றால் எதிரி பத்திரம் வாங்கிவந்தார். கடன் கொடுத்தற்கு ஆதரவாக ஆவணங்கள் வேண்டும் என்று என் தரப்பி கோரிக்கை வைக்கப்பட்டதா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக பத்திரம் வாங்கி வரசொன்னேன் என்றால் நான் வாங்கிவர சொல்லவில்லை. அவரே வாங்கி வந்தார். பணம் கொடுத்த நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக ஒன்றாக கூடினோம்.

3) கடன் கொடுத்த தேதியன்று புகார்தாரருக்கும் எனக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்கு கடன் கொடுத்த தேதியன்று நான் என் மனைவி /புகார்தாரர் ஊருக்கு சென்றேன் என்றால் எனது மனைவி பரதநாட்டிய கலைஞர் என்பதால் அவருடைய உடைகளுக்கு அளவெடுக்க நானும் என் நண்பரும் சென்றிருந்தோம். என் மனைவியின் ஊருக்கு செல்வதற்கு முன்பே எதிரிக்கு கடன் கொடுக்கும் விபரம் எனக்கு தெரிய வந்தது என்றால் தெரியவந்தது. என்னையும் என் மனைவியையும் கணவன் மனைவியாக புகார்தாரர் குடும்பத்தினரால் அங்கீகரிக்கப்பட்டது திருமணம் நடைபெற்ற நாள் முதல்தான் என்றால் சரிதான். கடன் கொடுத்த தேதியன்று என் மனைவி வீட்டில் மனைவியின் குடும்பத்தார்கள் எவரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. ம.சா.ஆ.1 ஐ எழுதியதற்கு யார் விபரம் சொன்னார்கள் என்றால் முத்து மற்றும் அவரது மகளும் சொன்னார்கள்.

4) எனது மனைவி பற்றிய விபரங்களை என் மனைவியே சொல்லிவிட்டார். ராஜபிரபு என்ன வேலை செய்கிறார் என்றால் டெக்ஸ்டைல் தொழில் செய்கிறார். ம.சா.ஆ 1ல் உள்ள விபரங்கள் படித்து காண்பிக்கப்பட்டதா என்றால் படித்து காண்பிக்கப்படவில்லை. ம.சா.ஆ.1 ஆவணத்தில் சித்ரா க/பெ. கௌதம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் கணவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ-1 ஆவணம் நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன முறையில் ஏற்படுத்தப்படவில்லை எனக்கும் புகார்தாரருக்கும் திருமணம் நடைபெற்ற பின்னர்தான் பின் யோசனையிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் மனைவி என்ன படித்துள்ளார் என்றால் டிப்ளமோ இன் கிளாசிக்கல் டான்ஸ் படித்துள்ளார். என் மனைவி வருமான வரி செலுத்திவருகிறாரா என்றால் செலுத்தி வருகிறார். எத்தனை ஆண்டுகளாக செலுத்திவருகிறார் என்றால் தெரியாது. அவருக்கு சொந்த வருவாய் தரக்கூடிய நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. அவருக்கு வருவாய் தரக்கூடிய தொழில் என்ன உள்ளது என்றால் டான்ஸ் புரோகிராம் ஆட்களை வைத்து செய்து வருகிறார். எந்த ஆண்டு மேற்படி படிப்பை என் மனைவி முடித்தார் என்றால் தெரியாது. எந்த ஆண்டு முதல் மேற்படி டான்ஸ் புரோகிராம் செய்து வருகிறார் என்றால் 6-7 ஆண்டுகளாக செய்து வருகிறார்.

5) என் மனைவியின் ஆண்டு வருமானம் என்ன என்பதை அவரது வருமான வரி கணக்கை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். அவரது வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. கடன் கொடுத்ததாக சொல்லும் காலக்கட்டத்தில் அவரது வருமானம் எவ்வளவு என்றால் 8-9 லட்சம் இருக்கும். என் மனைவிக்கு எந்தெந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் ICICI வங்கி, யூனியன் வங்கி, தமிழ்நாடு பாண்டியன் வங்கி ஆகிய வங்கிகளில் கணக்கு வைத்துள்ளார். மேற்படி வங்கி கணக்குகளின் பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா

என்றால் தயாராக உள்ளேன். மேற்படி வங்கி கணக்கை பார்த்தால் வருமானம் பற்றிய விபரம் தெரியவரும் என்றால் சரிதான். சரியாக எதிரி என் மனைவியிடம் எப்போது கடன் கேட்டார் என்ற தேதியை என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். எதிரிக்கு ரூ.12 லட்சம் கடன் கொடுப்பதற்காக வங்கியில் இருந்து பணம் எடுத்தற்கான பதிவுகள் வங்கி கணக்கில் உள்ளது. வங்கி கணக்கில் இருந்து எவ்வளவு தொகை எடுக்கப்பட்டது என்பதற்கு பதிவுகள் உள்ளது என்றால் நினைவில்லை. கடன் கொடுப்பதற்கு முன்பு எத்தனை நாட்களுக்கு முன்பு பணம் எடுக்கப்பட்டது என்றால் நினைவில்லை.

6) மேற்படி ரூ. 12 லட்சத்தை எவ்வாறு பணம் தயார் செய்யப்பட்டது என்றால் என் மனைவி நகையை அடகு வைத்தும் மற்றும் சேமிப்பு பணத்தில் இருந்தும் தயார் செய்தார். எத்தனை பவுன் நகை அடகு வைக்கப்பட்டது எவ்வளவு தொகை சேமிப்பில் இருந்து கொடுக்கப்பட்டது என்றால் அது நினைவில்லை. எந்த வங்கியில் நகை அடகு வைக்கப்பட்டது என்றால் ஐசிஐசியை வங்கி, கோனாபட்டு கிளை, பாண்டியன் கிராம வங்கி கோனாபட்டு கிளை மற்றும் யூனியன் வங்கி காரைக்குடி கிளையில் வைக்கப்பட்டது. ஒவ்வொரு வங்கியிலும் எத்தனை பவுன் எவ்வளவு தொகைக்கு அடகு வைக்கப்பட்டது என்றால் நினைவில்லை. எத்தனை நாட்களுக்கு முன்பு எதிரி கடன் கேட்டார் என்றால் நினைவில்லை.

7) கடன் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் எதிரி பணம் கேட்டதாக என் மனைவி என்னிடம் கூறினார் என்றால் நினைவில்லை. கடன் கேட்டதற்கும், கடன் கொடுத்தற்கும் எத்தனை நாட்கள் இடைவெளி இருந்தது என்றால் நினைவில்லை. நான் சொல்வதுபோல் நான் சொன்ன தேதியில் கடன் கேட்கவும் இல்லை, கடன் கொடுக்கவும் இல்லை, ம.சா.ஆ. 1 ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை என்பதால் நான் நினைவில்லை என்று சொல்கிறேன்என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு ரூ.12 லட்சம் கடன் கொடுக்கும்அளவிற்கு பொருளாதாரம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் புகார்தாரருக்கு எந்த ஒரு வருமானமும் இருந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்வதுபோல் வங்கியில் நகை அடமானம் வைக்கப்படவில்லை என்றாலும் அவரது சேமிப்பு தொகையும் எடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு என்ன தொழில் என்ன வருமானம் என்ற விபரம் தெரியுமா என்றால் சாமி படம் தயாரித்து வருகிறார். எதிரியின் வருமானம் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி கைத்தொழில் செய்யும் நபர் என்றால் சரிதான். எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் யார் என்றும் அவர்களது வருமானம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எப்போது எதிரியிடம் கடனை திருப்பி கேட்டேன் என்றால் 2023 ஆம் ஆண்டு கேட்டேன். நான் கேட்ட பின்பு எத்தனை மாதங்கள் கழித்து எதிரி என்னிடம் காசோலை கொடுத்தார் என்றால் 3 மாதங்கள் கழித்து கொடுத்தார். நான் காசோலையை பெற்று எத்தனை மாதங்கள் கழித்து வசூலுக்குதாக்கல் செய்தேன் என்றால் 1 மாதத்தில் தாக்கல் செய்துவிட்டேன். காசோலை கொடுத்த தேதியும், காசோலை பூர்த்தி செய்த தேதியும் ஒரே தேதியா அல்லது வெவ்வேறு தேதியா என்றால் ஒரே தேதிதான்.

8) எதிரி காசோலையை தாக்கல் செய்வதற்கு ஒரு மாத காலம் அவகாசம் கேட்டிருந்தாரா என்றால் கேட்டிருந்தார். காசோலை யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் தெரியாது. காசோலை கொடுத்த தேதியில் இருந்து 1 மாத காலம் காத்திருந்து பின்பு எதிரியிடம் கேட்டு காசோலையை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். காசோலையில் உள்ள விபரங்களில் தொகைக்கும், மற்ற விபரத்திற்கும் மை வேறுபாடு உள்ளது என்றால் இல்லை. எனது மனைவியின் தாயார் பெயர் என்னவென்றால் இராமஅமிர்தம்.என் மனைவியின் தாயாருக்கும் எதிரிக்கும் இடையே சிறு சிறு கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி புகார்தாரரின் தாயார் இராம அமிர்தம் என்பவரிடம் இருந்து ரூ.50 ஆயிரம் கடன் வாங்கியிருந்தார் அதற்கு ஆதரவாக கொடுத்த ஆவணங்களை பயன்படுத்தி இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கும் எதிரிக்கும் இடையே எந்தவித கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றால்

**சரியல்ல. புகார்தாரரின் தாயாரிடம் பெற்ற கடனை எதிரி திருப்பி செலுத்திவிட்டபோதிலும் அதற்கு ஆதரவாக கொடுத்த ஆவணங்கள் திருப்பி கொடுக்கப்படாமல் இருந்து விட்டதால் அதை அவரிடம் இருந்து இந்த வழக்கை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் வேறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. ஒரு காசோலை வழக்கு மட்டும் உள்ளது. நான் பொய்யாக ஆவணங்களை உற்பத்தி செய்து காசோலை வழக்குகளை தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் மனைவி உடல் நிலையில் நல்ல நிலையில் உள்ளார் என்றால் சரியல்ல. அவருக்கு கற்பபையில் பிரச்சனை உள்ளது. எனவே அவர் ஓய்வில் உள்ளார். நான் சொல்வதுபோல் என் மனைவிக்கு எந்த மருத்துவ பிரச்சனையும் கிடையாது என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.26 18:03:17 +0530

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)